2026 மார்ச் மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 41/2021

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW8 (LW14) – திருமாறன் |
| தகப்பனார் பெயர்: | சொக்கன் |
| ஊர்: | அல்லிநகரம் |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் |
| வயது : | 62 |

25.03.2026

(1, 3, 4, 5 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி 30.06.2023ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது தேனி மாவட்டம், அல்லிநகரத்தில் வசித்து வருகிறேன். கடந்த 10.10.2019ம் தேதி காலை 6.30 மணிக்கு நான் குரங்கனி காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது, போடி கே.புதூரை சேர்ந்த சுந்தர் தேவர் மகன் ரவிசுந்தர் மற்றும் அவருடன் வந்த வீரக்குமார் என்பவரும் காவல்நிலையத்தில் ஆஜராகி நடந்த சம்பவத்திற்கு புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். எனவே நான் காவல்நிலைய

கணினியில் வாக்குமூலமாக பதிவு செய்து, அவர்களுக்கு படித்துக் காண்பித்து கையொப்பம் பெற்றேன்.

2. காவல்நிலைய குற்ற எண்.64/2019 பிரிவுகள் 174 கு.வி.மு.ச.ன்படி சந்தேக மரணம் என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். காலை 6.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் 5 வது எதிரி ரவிசுந்தரும், சாட்சியாக 4 வது எதிரி வீரக்குமாரும் கையொப்பங்கள் செய்துள்ளார்கள். நான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் கனம் போடிநாயக்கனூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அவர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் முதல்நிலை காவலர் 1952 என்பவர் மூலம் காலை 7.00 மணிக்கு கடவுச்சீட்டுக் கொடுத்து விரைவு தபாலாக அனுப்பி வைத்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக மேல்விசாரணைக்காக 10.10.2019 ம் தேதியன்று பொறுப்பு அதிகாரியாக இருந்த காவல் ஆய்வாளர் திரு.தர்மர் அவர்கள் மேற்விசாரணைக்கு காலை 7.30 மணிக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 முதல் 5 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

4. நான் குரங்கனி காவல்நிலையத்தில் எத்தனை ஆண்டுகளாக பணியில் இருந்தேன் என்றால் சுமார் 1 1/2 ஆண்டுகள் இருந்தேன். சம்பவ இடத்திலிருந்து குரங்கனி காவல்நிலையம் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 9 கி.மீ. ஆகும். முதல் தகவல் அறிக்கையின்படி சம்பவ தேதி 09.10.2019 ம் தேதி என்றால் சரிதான். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எனக்கு தட்டச்சு செய்ய தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். சம்பவ சம்பந்தமாக புகார் வாக்குமூலத்தை தவிர வேறு எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. வாக்குமூலத்தில் சில நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மரணம் சந்தேக மரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டதற்கு முதல் தகவல் அறிக்கையில் எந்த காரணமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அவர்கள் மலையில் இருந்து வந்து கொடுத்தார்கள். அவர்கள் மலையில் இருந்து வந்துக் கொடுத்தார்கள் என்று வாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரை மிரட்டி காவல்நிலையத்தில் வைத்து புகார் பெற்று பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மூத்த அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வாறு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :- இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.03.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.25 18:28:08 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.03.2026